**புதுச்சேரி அரசு**

**அறிவியல் தொழிநுட்ப மற்றும் சுற்றுசூழல் துறை**

**அறிவியல் தொழில் நுட்ப மாமன்றம்**

## செய்தி குறிப்பு

இந்திய நாட்டின் 75 ஆவது சுதந்திர திருநாளை கொண்டாடும் வகையில் சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழாவை மத்திய அரசு கொண்டாடி வருகிறது. இந்த அமுதப் பெருவிழா வரும் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை கொண்டாடப்பட உள்ளது.

புதுச்சேரி அரசு அறிவியல் தொழில்நுட்ப மற்றும் சுற்றுச்சூழல் துறை சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழாவின் நிகழ்ச்சிகளாக வருகின்ற 11, ஆகஸ்ட் 2022 முதல் 17, ஆகஸ்ட் 2022 வரை முனைவர் அப்துல் காலம் அறிவியல் மையம் மற்றும் கோளாரங்கத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் அந்த நாட்களில் முன்னாள் ராணுவ வீரர்கள் மற்றும் விடுதலை போராட்ட தியாகிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முனைவர் அப்துல் கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்கத்தை இலவசமாக பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அந்த நாட்களில் வரும் பார்வையாளர்களுக்கு தடை செய்யப்பட்டுள்ள ஒருமுறை பயன்படுத்தும் நெகிழி பொருட்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்கு துணி பைகள் வழங்கப்பட உள்ளது.

ஆகஸ்ட் 13 ஆம் தேதி அன்று விடுதலை வீரர்களின் தியாகங்களை போற்றும் வகையில் அது தொடர்பான திரைப்படம்

இரண்டு காட்சிகளாக காலை 11 மணி மற்றும் மாலை 3 மணி அளவில் இம்மையத்தில் காண்பிக்கப்படும்.

மேலும் ஆகஸ்ட் 15 மற்றும் 16ஆம் தேதி என்று காலை 6 மணி அளவில் முனைவர் அப்துல் கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்கத்தில் கொடியேற்றம் மற்றும் தேசபக்தி பாடல்களை பாடவிருக்கின்றனர். இந்திய விடுதலை தொடர்பாக ஆகஸ்ட் 17ஆம் தேதி காலை 10 மணி அளவில் சிறப்பு பேச்சாளர் உரை நிகழ்த்த உள்ளார்.

விடுதலை வீரர்களின் தியாகத்தை போற்றுவோம். வீடு தோறும் தேசிய கொடியை ஏற்றுவோம்.

* * *